சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 119/2017

**PW 3 - பூவேந்திரன்** **30.09.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணையின் தொடர்ச்சி</u>

எங்கள் அலுவலகத்தில் தேடியபோதும் ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை. என்னிடம் காட்டப்படும் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிலிருந்து ஆராய்வாளர் நகராட்சி ஆணையருக்கும், நகலை குப்பாம்மாள், க/பெ.லேட்.திருமூர்த்திக்கும் அனுப்பிய உத்தரவு எங்களுக்கும் கிடைத்திருக்கும், ஆனால் அதன் நகல் எங்களிடம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம்போல் தான் எப்பொழுதும் ஆராய்வாளரால் அனுப்பப்படும். சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டு **வாசாஆ 14** ஆக குறியீடு செய்யப்பட்டது (பிரதிவாதி வழக்கறிஞர் ஆட்சேபணை பேரில் குறியீடு செய்யப்பட்டது). 31.01.1991 தேதியிட்ட ந.க.எண்.சி4/6197/90 குடும்ப ஓய்வூதிய உத்தரவு சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டு **வாசாஆ 15** ஆக குறியீடு செய்யப்பட்டது (பிரதிவாதி வழக்கறிஞர் ஆட்சேபணை பேரில் குறியீடு செய்யப்பட்டது).

<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாசாஆ 14,15 ஒளிநகலை சென்ற வாய்தாவில் பார்த்தேன். வாசாஆ 14,15 போல் எங்கள் அலுவலகத்தில் ஆவணங்கள் எதையும் நான் பார்த்ததில்லை என்றால் சரியல்ல, பார்த்துள்ளேன். ந.க.எண்.சி4/6197/90 முந்தைய மற்றும் பிந்தைய

ஆவணங்களை பார்த்ததில்லை என்றால் சரிதான். வாசாஆ 14,15 சம்பந்தமான கோப்புகள் எங்கள் அலுவலகத்தில் இ,ல்லை என்றால் சரிதான். வாசாஆ 14,15 உண்மை தன்மை குறித்து அதில் கையெழுத்து செய்த அதிகாரிகளால் தான் சொல்லமுடியும் என்றால் சரிதான். வாசாஆ 14,15 உண்மை தன்மை குறித்து நான் சொல்ல இயலாது என்றால் சரிதான்.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி